## தலைப்பு 277 – மொனராகலை மாவட்ட செயலகம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மொனராகலை மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மொனராகலை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொனராகலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மொனறாகலை மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மொனறாகலை மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு

முறைமையொன்றை தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டது.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம்

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் கூறப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

#### 1.6.1.1 மூலதனச் செலவினங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகம் மற்றும் மடுள்ள மற்றும் வெள்ளவாய பிரதேச செயலகங்களினால் மீளாய்வாண்டின் மேற் கொள்ளப்பட்டிருந்த மொத்தம் ரூபா 2,330,016 ஆன பெறுமதியான 04 மூலதனத் தன்மையிலான செலவினம் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அச்செலவினம் மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தலின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | 2021 பாதீட்டின் மூலம் நிதிச் சொத்துக்களை கையேற் பதற்காக நிதிஏற்பாடு மேற் கொள்ளப்பட்டிருந்த போதும் மட்டுப்படுத்தப்பட்ட அளவே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் ஆண்டில் இந் நிர்மாணத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததால் மூலதனச் சொத்துக்களை மேம்படுத்தும் செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டது. இந்நிர்மாணங்களின் பெறுமதி ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிக்கு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியான செலவின விடயத்திற்கு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இயந்திரங்கள் மற்றும் பொறிகள் செலவின விடயத்தின் கீழ் 40 பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 25,348,,340 நிதிஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்த போதும் அப்பொருட் கொள்வனவு தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரண செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன் | சரியான செலவின விடயத்திற்கு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.1.2 வைப்புக் கொடுப்பனவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் வைப்புக் கொடுப்பனவு ரூபா 228,306,434 ஆக இருந்த போதும் நிதிச் செயலாற்றல் கூற்றிலும் காசுப்பாய்ச்சல் கூற்றிலும் ரூபா 228,321,474 என ரூபா 15,040 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | திறைசேரி குறிப்புக்கள் மற்றும் ஒப்பிட்டு சரியான பெறுமதி கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

#### 1.6.2.1 நிதியல்லாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) முன்னைய ஆண்டின் இறுதியில் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,369,158,069 ஆக இருந்த போதும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக ரூபா 2,370,876,603 என காண்பித்த காரணத்தினால் ரூபா 1,718,534 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | தொழில்நுட்ப ரீதியாக காணப்படும் தவறொன்றாக இருப்பதால் மீதிகளுக்கு இடையே வேறுபாடொன்று காணப்பட்டது. குறித்த வேறுபாடு தொடர்பாக திறைசேரிக்கு அறிவித்திருந்ததுடன் எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக. | நிதிக்கூற்றுக்களில் ஆரம்ப மீதிகளை சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் வேறுபாடுகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் ஆரம்ப மீதிகள் ரூபா 4,619,567 ஆக இருந்த போதும் அதற்காக சமர்ப்பித்த அட்டவணையின் பிரகாரம் பெறுமதி ரூபா 7,175,383 ஆக இருந்தமையால் ரூபா 2,555,816 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் வேறுபாட்டிற்கு குறித்த ஆண்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,374,216 தொகை மற்றும் ரூபா ரூபா 181,600 பெறுமதி காரணமாக இருந்தது. | சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**1.6.2.2 முற்பணக் கணக்கு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மரணித்த, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் மீதி ரூபா 1,863,855 தொகையாக இருந்ததுடன் அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 1,630,398 ஆக இருந்தது. | அறவிடுவதற்கும் தீர்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன் | நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 66/69 இன் பிரகாரம் நிதிஏற்பாடுகளை மாற்றும் போது உள்ளவாறான தேவைப் பாட்டை இனங்கண்டு அதன் பிரகாரம் மாற்றல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதும் அவ்வாறு செயற்படாமையால் 04 செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் 6 சதவீதம் முதல் 955 சதவீதம் வரையான வீச்சில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | 02 ஆம் இலக்க நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச செயலகங்களின் நிதி தேவைப்பாடு வெவ்வேறாக கருதி நிதிப் பிரமாணம் 66/69 இன் கீழ் மாற்றப்பட்டிருந்தது. 277 ஆம் தலைப்பிற்காக பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதிஏற்பாட்டினை கருத்திற் கொண்டு நி.பி 66 இன் பிரகாரம் மாற்றப்பட்ட செலவின விடயங்களில் ஆண்டின் இறுதியின் போது சேமிப்பொன்று காண்பிக்கப்பட்ட போதும் வெவ்வேறாக எடுத்த போது குறிப்பிடப்பட்டுள்ள வீச்சில் சேமிப்புக்கள் காண்பிக்கப்படவில்லை. | உள்ளவாறான தேவைப்பாட்டை இனங்கண்டு அதன் பிரகாரம் நிதிஏற்பாடு மாற்றல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.2 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஜனாதிபதி செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கிராம சக்தி மக்கள் வேலைத்திட்டம்.** | | |
| (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மொனராகல மாவட்டத்தில் 11 பிரதேச செயலகப் பிரிவுகளின் கீழ் 125 கிராம சக்தி சங்கங்கள் இற்குப் பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 79,771,475 நிதித் தொகையானது 2022 மார்ச் மாதம் வரையிலும் பயனுள்ள வேலைகளுக்குப் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | சமுர்த்தி, வீட்டுப் பொருளாதாரம், நுண் நிதி, சுய தொழில் மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் கிராமிய சக்தி நிறுவனத்தைப் பதிவு நீக்கம் செய்து பிரதேச செயலகத்தில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | ஒதுக்கப்பட்டுள்ள நிதியைச் செயற்திறனாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) முதற்கட்ட நடவடிக்கையாக 07 பிரதேச செயலகங்களினூடாக வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் 2019 ஆம் ஆண்டு சுழற்சி கடன் முறையின் கீழ் வழங்கப்பட்ட கடன் தொகையில் ரூபா 5,857,934 மற்றும் வட்டியாக ரூபா 516,662 நிலுவையில் காணப்பட்டது. | கிராம சக்தி மக்கள் சங்கமானது பிரதேச செயலகத்தினுள் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் இந்நிதித் தொகையை மீளப் பயன்படுத்தல் தொடர்பாக அமைச்சரவையின் ஆலோசனையின் படி நான் செயற்படுவேன் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன் | நிலுவை கடன் மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) முதற்கட்ட நடவடிக்கையாக மடுல்ல பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 03 கிராம சேவகர் பிரிவுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு நூற்றுக்கு 50 சதவீதமான பயனாளிகளுக்கான பங்களிப்பின் கீழ் 2019 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட கடன்தொகையில் இருந்து 2021 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் ரூபா.375,000 கடன் மற்றும் ரூபா.52,688 வட்டி என்பன நிலுவையில் இருந்தன. | மாவட்ட செயலாளர் மாநாட்டில் இப் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரை யாடப்பட்டாலும் இதுவரை திட்டவட்டமான ஆலோசனை யொன்று அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெறாமை காரணமாக சுழற்சி நிதி அமைப்பு முறையாகச் செயற்படவில்லை. | கடன் தொகையைக் காலதாமதமின்றி அறவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) இலங்கை மகளிர் பணியகம் சுழற்சிக் கடன் திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | படல்கும்குர பிரதேச செயலகத்தினால் 2009 தொடக்கம் 2020 வரையில் 109 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையில் ரூபா.1,298,351 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீள அறவிடப்படவில்லை | கடனாளிகள் தவணை முறையில் கடனை மீளச் செலுத்துகின்றனர். | நிலுவைக் கடன்தொகை காலதாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |
| (ii) | மெதகம பிரதேச செயலகத்தினால் 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன் தொகையில் 08 கடனாளிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 53,300 தொகையானது 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படவில்லை. | அறவிடப்பட வேண்டிய கடன்தொகையில் ரூபா.13,850 அறவிடப்பட்டுள்ளது. மேலும் அறவிடப்பட வேண்டிய கடன்தொகையை எதிர்வரும் தினங்களில் அறவிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் | - மேற்படி - |
| (iii) | தனமல்வில பிரதேச செயலகத்தினால் 2009 தொடக்கம் 2016 வரையிலான காலத்தினுள் பல்வேறு திட்டங்களின் கீழ் 56 கடனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடன்தொகையில் ரூபா.737,410 ஆன கடன் மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிலுவையாகக் காணப்பட்டது. | அறவிடப்படாது உள்ள கடன் நிலுவைகளை அறவிடு வதற்காக தொடர்பாகத் தேவையான அறிவுறுத்தல்கள் இலங்கை மகளிர் பணியகத்தின் மூலம் கோரப்பட்டுள்ளது. அந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வேன். | - மேற்படி - |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 03 ஆம் இலக்கம் மற்றும் 1974 இன் 40 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1969 இன் 07 ஆம் இலக்க அரசின் வீட்டு உரித்தினை மீள | 106,000 | உடன்படிக்கைகாலம் முடிவடைந்த போதும் மீண்டும் கையளிக்கப்படாத அரசின் 06 வீடுகளை தொடர்புடைய சட்டத்தின் பிரமாணங்களின் பிரகாரம் மீண்டும் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வீடுகளை மீண்டும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அரசின் வீடுகளை மீண்டும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எடுக்கும் சட்டம் | | | | |
| (ஆ) | 2009 இன் 66 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டிருந்த 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்க மற்றும் புவிச்சரிதவியல் மற்றும் கணிப்பொருள் சட்டம் மற்றும் சுற்றாடல் வனசீவராசிகள் அமைச்சின் 01/2020 மற்றும் 2020 ஜனவாரி 03 ஆந் திகதிய சுற்றுச்சூழல் சுற்றுநிரூபம் 28 மற்றும் 44 பிரிவு | 71,563 | புவிச்சரிதவியல் மற்றும் கணிப்பொருள் பணியகத்தின் செல்லுபடியான அகழ்வு அனுமதிப்பத்திமொன்றை பெற்றுக்கொள்ளாமல் தனமல்வில பிரதேச செயலகத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த 26 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக மண்/குருணிக் கற்கள் 10 இடங்களில் மேற் கொள்ளப்பட்டிருந்தது. மேலும் அதற்குரிய அரசிற்காக அறவிடப்பட வேண்டிய அரசிறை வருமானம் இழக்கப்பட்டிருந்தது | அடுத்த அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது மண், குருணிக் கற்கள் பெற்றுக் கொள்ளும் போது அனுமதிப்பத்திரத்ததை யுடைய இடங்களிலிருந்து மாத்திரம் பெற்றுக் கொள்வதற்கு ஒப்பந்தக்காரர்களுக்கு அறிவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். அரசிறை வருமானமான ரூபா 71,563 தொகையை உடடன்படிக்கை செய்து கொண்ட சங்கங்களிடமிருந்து அறவிட்டு அரசிற்கு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். 08 செயற் திட்டங்களுக்கான ரூபா 18,542 தொகை அறவீடு செய்து அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டது. | சட்டத்தினும் சுற்றறிக்கையினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் மண் அல்லது குருணிக் கற்கள் அகழ்வு மேற்கொள்ளும் போது செல்லுபடியான அனுமதிப்பத்திர மொன்றை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அரச வருமானத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 6.2 ஆம் பிரிவு | | அரச வீடொன்று அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு மாத்திரம் ஒதுக்கி வழங்க முடியுமாக இருந்தும் அதற்கு முரணாக 28/49 ஆம் வீத வரி இலக்க அரசின் வீடு 2017 செப்தம்பர் 25 ஆந் திகதி முதல் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மாதந்தம் ரூபா 3,000 வாடகைக்கு தற்காலிக குடியிருப்பிற்காக தனியார் நிறுவனமொன்றில் சேவை புரியம் பொறியியலாளர் ஒருவரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தது. | புதிய வீட்டுத் தொகுதி நிர்மாண வேலைகள் நடைபெறும் இவ்வீட்டின் அரச உத்தியோகத்தர்களுக் கு குடியிருப்பது சிக்கலென அறிக்கை இடப்பட்டுள்ளதால் ரூபா 3,000 ஆன மாத வாடகைக்கு சீ.டீ.எஸ்.எல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு மாத்திரம் அரச வீடு ஒதுக்கி வழங்கப்பட வேண்டும். அறவிடப்பட வேண்டிய அதற்குரிய வாடகையும் தாபன விதிக் கோவையின் பிரகாரம் அறவிடப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வேண்டும். |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | | |
| (i) நிதிப் பிரமாணம் 104(4) | | நட்டங்கள் சேதங்கள் ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் முழு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 1-5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் மிகைத்திருந்த 4 வாகன விபத்துக்கள் தொடர்பாக அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை | அடுத்துவரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) நிதிப் பிரமாணம் 237(அ)(i) மற்றும்(ஆ) | 12,864,759 | கட்டளையிடப்பட்ட வழங்கல் மற்றும் சேவைகளைப் வழங்காதிருக்கையில் அது தொடர்பாக காணப்படும் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைக்கு முழுமையாக முரணாக மொனறாகல மாவட்ட செயலகத்தினால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்குனர்களுக்கு 19 காசோலைகள் எழுதியிருந்த போதும் 2022 மார்ச் 29 ஆந் திகதி வரையிலும் அக்காசோலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன | 05 காசோலைகள் 2022 மே 26 ஆந் திகதி வரை வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனைய காசோலைகளை அரசின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அது தொடர்பான தரப்பினருக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (iii) நிதிப்பிரமாணம் 571(3) | 6,295,355 | மாவட்ட செயலகம் மற்றும் 07 பிரதேச செயலகங்களுக்குரிய 02 வருடங்கள் காலம் கடந்த மூன்றாம் தரப்பினருக்கு மீண்டும் கொடுப்பனவு செய்வதற்காக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட வைப்புக்கள் மற்றும் ஒப்பந்தங்களுக்கான நிறுத்திவைக்கப்பட்ட பணம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை | மாவட்ட செயலகத்தின் ரூபா 2,862,219 தொகை கணக்காய்வு விசாரணை காணப்படுவதாலும் ரூபா 61,862 தொகை நிர்மாணத்தில் குறைபாடுகள் காணப்படுவதாலும் கொடுப்பனவு செய்யாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ரூபா 630,202 ஐ அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 1,224,800 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொகையை விரைவில் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கைப எடுப்பேன். | |
| (உ) 2006 இன் பெறுகை வழிகாட்டல் கோவை<br>----------------------------------- | | | | |
| (i) 5.4.8 (அ) பிரிவு | | வீடமைப்பு நிர்மாண மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதிஏற்பாடுகளின் கீழ் ஹேபஸ்ஸ தொல்லியல் இடத்திற்கான நுழைவு வீதியை புனரமைப்பதற்காக 2019 செப்தம்பர் 18 ஆந் திகதி ஒப்பந்தக்காரர் ஒருவருடன் ரூபா 2,389,340 பெறுமதிக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரர் பணியை மேற்கொள்ளாமல் இருந்ததுடன் செயலாற்றல் பிணை முறியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். செயற்திட்டத்தை வேறு நடைமுறையொன்று ஊடாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவுகளின் பிரகாரம் செயலாற்றல் பிணை பொறுப்பினை அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) 8.9.1 (ஆ) ஆம் பிரிவு | 9,176,057 | ரூபா 500,000 இனை விஞ்சிய பொருட்கள் சேவைகள் ஒப்பந்த மொன்றிற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்று எழுதி கையொப்பமிட வேண்டிய போதிலும் மொனறாகல மாவட்ட செயலகத்தினால் 4695 பிளாஸ்டிக் கதிரைகள், 05 நீர் பவுசர்கள், 18 டெப் இயந்திரங்கள் கொள்வனவு செய்யும் போது அவ்வாறான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஊ) 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 2008/4 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 3.3 | | • தனமல்வில பிரதேச செயலகத்தின் போதாகம கிராம சேவையாளர் பிரிவில் ½ ஏக்கர் அளவிலான அரசின் காணியில் 2021 ஆம் | குறித்த அத்துமீறியருக்கு எதிராக வெள்ளவாய கௌரவ நீதிமன்றத்தில் உரித்தினை மீளப் | சுற்றறிக்கையின் 3.3 பிரிவின் பிரகாரம் இரண்டு வார அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| ஆம் பிரிவு | ஆண்டில் அத்துமீறிய ஒருவரால் பல கடைகளை அமைப்பதற்காக 64 கொங்கிரீட் தூண்கள் அமைத்திருந்ததுடன் காலதாமதத்தின் பின்னர் கிராம சேவையாளரால் 2021 யூன் 07 ஆந் திகதி அத்தகைய அனுமதியற்ற நிர்மாண செயற்பாடு தொடர்பாக அறிக்கை இடப்பட்டிருந்தது. அத்தோடு அந்த அத்துமீறிய நிர்மாணத்தை அகற்றுவதற்கு 2021 திசெம்பர் 15 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை | பெற்றுக்கொள்ள சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது | அடுத்து வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| | • தனமல்வில பிரதேச செயலகத்தின் கீழ் ஹொபரகொட குளத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டில் புதிய காணி பகிர்ந்தளிப்பு காணி கச்சேரியின் 18 நலனாலிகளுக்கு பகிர்ந்தளிக்க உத்தே சிக்கப்பட்டிருந்த உத்தேச 18 வயல் காணி துண்டுகளில் 2013 ஆம் ஆண்டிலிருந்து அத்துமீறி பயிர்செய்கை செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுவதால் நலனாலிகளுக்கு அந்த அனுமதிப் பத்திரங்களை பகிர்ந்தளித்தல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த அத்துமீறிய காணியிலிருந்து வெளியேற்றுவதற்கு 2021 திசெம்பர் மாதம் வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அத்துமீறி உடமை கொண்டுள்ள 03 ஏக்கர் அளவிலான பிரதேசத்தை சரியாக இனங்காண்பதற்காக நில அளவைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திட்ட வரைபடம் கிடைத்தவுடன் குறித்த அடுத்த நடவடிக்கைகளை எடுப்பேன். | சுற்றறிக்கையின் 3.3 பிரிவின் பிரகாரம் இரண்டு வார அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்பட்டு அடுத்து வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | தொடர்புடைய சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்ட 3 மாதங்களுக்குள் கைதவிர்க்கப்பட வேண்டிய வாகனங்களை கைதவிர்த்து பூர்த்தி செய்வதற்கு அனைத்து செயற்பாடுகளும் மேற்கொள்ள வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்திற்குரிய உடைந்த பொருட்களாக காணப்படும் 9 வாகனங்களையும் 2022 பெப்ரவரி 24 ஆந் திகதி வரை கைதவிர்ப்பு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் கைதவிர்ப்பு செய்வதாக | சுற்றறிக்கை ஆலோசணை மற்றும் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

-------------------------------------

**3.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்களைப் பெற்றுக்கொள்ளாமை**

----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வளமான கிராமம் மக்கள் பங்கேற்பு கிராம அபிவிருத்தித் திட்டம் - 2020** | | |
| i மடுள்ள பிரதேச செயலகத்திற்குட்பட்ட இங்கினியாகல பிரதேசத்தில் கைத்தொழில் பயிற்சி மற்றும் சந்தைப்படுத்தல் நிலையத்தின் நிர்மாணப் பணிக்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,969,508 செலவிடப்பட்டிருந்தது. நிர்மாணப் பணிகள் முடிவடைந்து ஒரு வருட காலம் கடப்பதற்கு முன் இக்கட்டிடத்தின் தளம் 9.16 மீற்றர் நீளத்திற்கு விரிசல் ஏற்பட்டுள்ளதாக 2022 ஜனவரி 28 ஆம் திகதி அவ்விடத்தில் மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனைபோது கண்டறியப்பட்டது. இத் தொழிற்துறைப் பயிற்சி | ஏற்றுக்கொள்கிறேன். சரியான முறையில் கட்டிடத்தை நிர்மாணித்ததன் பின்னர் பிடிகாசுத் தொகையை விடுவிப்பேன். மின்சார வசதிகள் இல்லாத காரணத்தால் நோக்கத்திற்குரிய பணிக்காக பயன்படுத்தப்படவில்லை. | நிதியத்தை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும் என்பதுடன் செயற் திட்டங்களினூடாக அடைய வேண்டிய இலக்குகளை அடைய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் உற்பத்தி விற்பனை நிலையம் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படவில்லை. | | |
| ii | தனமல்வில பிரதேச செயலகப் பிரிவின் மஹவெவ பிரதேசத்தில் முன்பள்ளிக் கட்டிடமொன்று ரூபா 1,980,000 செலவில் கட்டப்பட்டு ஓராண்டுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் அக்கட்டடம் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படவில்லை. | நீர், மின்சாரம் மற்றும் சுகாதார வசதிகள் பெறப்பட்டதன் பின்னர் முன்பள்ளிக்காக அக்கட்டிடத்தைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | முதலீடு செய்த பணத்தைத் செயற்திறனாக பயன்படுத்த வேண்டியதுடன் எதிர்பார்த்த இலக்குகளை அடைய வேண்டும். |

## 3.2 செயற்திட்டங்களைப் நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீடமைப்பு நிர்மாண மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் ஹேபஸ்ஸ தொல்லியல் இடத்திற்கான நுழைவு வீதியை புனரமைப்பதற்காக 2019 யூன் 19 ஆந் திகதி ரூபா 3,594,053 ஆன நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. நிர்மாணத்திற்காக தெரிவு செய்யப்பட்ட முதலாவது மற்றும் இரண்டாவது ஒப்பந்தக்காரர்கள் செயற்திட்டத்ததை நிறைவேற்றாத காரணத்தினால் புத்தள பிரதேச சபையின் வேண்டுகோலின் பேரில் இச்செயற்திட்டத்தை நேர் உழைப்பு அடிப்படையில் மேற்கொள்வதற்கு 2020 சனவரி 21 ஆந் திகதி புத்தள பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. பிரதேச சபையுடன் எழுத்துமூல உடன்படிக்கை மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் செயற் திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதியும் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் நடவடிக்கை களை பூர்த்தி செய்யாமை காரணமாக 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் இச் | தவறுதலாக உடன்படிக்கை செய்யப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். தற்போது நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு கொடுப்பனவிற்காக பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் செயற்திறனாக நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| செயற்திட்டத்திற்காக கிடைத்த நிதிஏற்பாடுகளில் ரூபா 864,065 பணத்தை 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் மின்சார வேலிகளை பராமரித்தல் மற்றும் பின்தொடர் செயற்பாடுகளுக்குரிய மின்சார வேலிகளை அண்மித்து காவலர் கூடங்களை அமைப்பதற்காக 2020 மார்ச் மாதம் 08 ஆந் திகதி ரூபா 36,451,618 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 05 பொதிகளாக ஒதுக்கீடு செய்து தெரிவுசெய்யப்பட்ட இரண்டு ஒப்பந்தக்காரர்களுடன் 1/2/3 ஆம் இலக்க பொதிகள் மற்றும் 5 இன் கீழ் ரூபா 25,009,958 இற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2022 மார்ச் 22 ஆந் திகதி வரையிலும் இந்நிர்மாண செயற்பாடுகள் பூர்த்தி செய்வதற்கோ செயற்திட்டத்தின் உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை | இந்த நிர்மாணத்திற்குரிய பிடிகாசு உட்பட அனைத்து கொடுப்பனவுகளும் தற்போது கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் வைப்புக் கணக்கில் காணப்படும் ரூபா 33,572 தொகையை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். | மதிப்பிடப்பட்ட வேலைப்பகுதிகள் உடன்படிக்கை காலத்திற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் |

## 3.3 உள்நாட்டு நிதியங்களால் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) கிராமிய மற்றும் பாடசாலைகள் விளையாட்டு உட்கட்டமைப்பு அமைச்சின் நிதிஏற்பாடுகளின் கீழ் மொனறாகல மாவட்டத்தின் விஜயபுர கனிஷ்ட வித்தியாலயத்தின் விளையாட்டரங்கினை அபிவிருத்தி செய்தல் | | |
| i விளையாட்டரங்கு 1821 மீற்றர் கியுப் மண் வெட்டப்பட்டு மட்டப்படுத்தி நீர் இட்டு பதப்படுத்தியதாக கொடுப்பனவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் | புற்களுடன் கூடிய சுற்றுப்புற பகுதியே எஞ்சியுள்ள மண் பகுதியாகும். ஆதலால் கூடுதலான கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. | சரியான அளவீட்டு அறிக்கை பெற்று கொடுப்பனவு அறிக்கை தயாரித்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விளையாட்டரங்கிலிருந்து வெட்டி எடுத்த மண்ணில் இருந்து 677.06 கியுப் மட்டப்படுத்தி நீர் இட்டு பதப்படுத்தப்படாமல் இருக்கையில் அதற்காக ரூபா 254,100 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| ii | நிர்மாணிக்கப்பட்டிருந்த காண் ஆரம்பத்தில் 9.5 மீற்றர் நீளமான பகுதியின் ஆழம் 0.250 மீற்றாக இருந்த போதும் பட்டியலைத் தயாரிக்கும் போது காணின் ஆழம் 0.450 மீற்றர் என அளவிட்டு தயாரித்தமை காரணமாக ரூபா 25,293 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கூடுதலான கொடுப்பனவொன்ற இடம்பெறவில்லை. | - மேற்படி - |
| iii | 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.2 ஆம் பந்தியின் பிரகாரம் மூன்று மாத காலப்பகுதியை விஞ்சும் வேலைகளுக்காக ஏதேனும் ஒப்பந்தமொன்றின் விலை விலகலுக்காக ஒதுக்கீடு செய்து கொடுப்பனவு செய்ய முடியுமாக இருந்த போதும் உடன்படிக்கை காலம் 60 நாட்களான இந் நிர்மாணத்தின் விலை விலகலுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 172,353 தொகை கூடுதலான கொடுப்பனவாக அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டு நிர்மாணப் பொருட்களின் விலை ஏற்ற இறக்கம் காரணமாக ஊவா மாகாண சபை யினால் 05/2021 சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது. மாவட்ட செயலகம் மாகாண சபையினால் வழங்கப்பட்ட கட்டணங்களை பயன்படுத்து வதால், அச்சுற்றறிக்கையின் பிரகாரம் மதிப்பீட்டிற்காக விலை விலகலை உள்ளடக்கப்பட்டது. | 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.2 ஆம் பந்தியின் பிரகாரம் விலை விலகலுக்காக கொமுடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகத்தின் உத்தியோகபூர்வ விடுதியை பழுதுபார்ப்பதற்காக ரூபா 2,468,941 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br>வாகன தொகுதியின் தரை தளத்தில் கொங்கிரீட் பரப்பி வெள்ளை இடும் பணிக்காக 28.47 ச.மீ. இற்காக ரூபா 55,630 செலுத்தப்பட்டிருந்த போதிலும், வெள்ளையிடப்பட்ட அளவு 19.89 ச.மீ என நிலைய பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக ரூபா 16,765 தொகை | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | செய்யப்பட்ட வேலைக்கு மாத்திரமே பணம் செலுத்த வேண்டும், மேலும் மிகை கொடுப்பனவு வசூலிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | மெதகம பிரதேச சபைக் காரியாலயத்தால் கம்பெரலிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டு திம்பிரிய விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்திக்காக ரூபா 970,000 செலவிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 32.5 மீற்றர் நீளமுள்ள பக்கச்சுவர் அமைப்பதற்கு ஜேசிபி இயந்திரத்தின் மூலம் அத்திவாரம் வெட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் இத்திட்டத்தினை மதிப்பீடு செய்யும் போது அரசுக்கு குறைந்தபட்ச செலவு ஏற்படும் வகையில் இயந்திரங்களைப் பயன்படுத்தி வடிகால்களை வெட்டுவதற்கான மதிப்பீடுகளைத் தயாரிக்காததாலும் பணம் செலுத்துவதற்கு பொதுவான விகிதத்தைப் பயன்படுத்தியதாலும் ரூபா 35,152 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கூடுதலான கொடுப்பனவு எனக் சுட்டிக்காண்பிக்கப்பட்ட போதிலும், ”704” படிவத்தை கணக்கில் எடுத்துக் கொண்டாலும், செயற்திட்ட நிதி ஏற்பாட்டு வரம்பை மீறி வேலை நிறைவேற்றப் பட்டுள்ளதாக தெரிகிறது. | அரசாங்கத்திற்கு சாதகமான விகிதங்களைப் பயன்படுத்தி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| **(ஈ)** | **தனமல்வில பிரதேச செயலகத்தால் வளமான கிராம மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2020**<br>------------------------------------------------ | | |
| i | வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 03 வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு 958 கனமீற்றர் மண்/ குருணிக்கல் என்பன தனியார் நிறுவனம் ஒன்றினால் நடத்தப்படும் அரச காணியில் பணம் செலுத்தப்படாது பெறப்பட்டதுடன், அதற்கென ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 609,288 மேலதிகக் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. அத்துடன் இரண்டு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் மண் அள்ளும் பணி நிறைவேற்றப்படாத | கூடுதலான கொடுப்பனவு மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | மிகை கொடுப்பனவு வசூலிக்கப்பட வேண்டும். அத்தடன் மதிப்பீடுகளை தயாரிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட குருணிக் கற்கள் வழங்கும் இடங்கள் இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலையில் கொண்டு வரப்பட்ட 808 கனமீற்றர் கியுப் மண்ணுக்கு ரூபா 127,300 மேலதிகமாகச் செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | |
| ii | போதாகம குறுக்கு வீதி வீதியில் மதகு நிர்மாணித்து கிரவல் இட்டு புனர்நிர்மாணம் செய்வதற்கு ரூபா.1,980,000 செலவிடப்பட்டது. வீதிக்காக அனுமதிக்கப்பட்ட மண்/ குருணிக்கல் இடுவதற்காக 436 மண் கியூப்பிற்காக ரூபா 5,23,898 செலவிடப் பட்டிருந்ததுடன் அக் கிரவல் மண் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதியில் பின் பகுதியில் அமைந்துள்ள தனியார் காணியொன்றில் இருந்து பெறப்பட்டதுடன் அக்காணி உரிமையாளருக்கு ரூபா. 33,000 வழங்கப் பட்டதுடன் மண்ணிற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 244,296 மேலதிகக் கொடுப்பனவாக வழங்கப்பட்டது அவதானிக்கப்பட்டது. | கூடுதலான கொடுப்பனவு மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | மிகை கொடுப்பனவு வசூலிக்கப்பட வேண்டும். அத்தடன் மதிப்பீடுகளை தயாரிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட கிரவல் வழங்கும் இடங்கள் இனங் காணப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| iii | உஸ்கல இராணுவ வீதியில் கோசுவ நிர்மாணத்திற்காக ரூபா 493,372 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. வீதியானது 66.5 மீற்றர் நீளம் மற்றும் 2.5 மீற்றர் அகலத்திற்கு கொங்கிறீட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றுள் கொங்கிறீட் இடப்பட்ட 04 இடங்களுக்கு நடுவே 10 மீற்றர், 8.3 மீற்றர், 09 மீற்றர் மற்றும் 3.5 மீற்றர் (மொத்தம் 30.8 மீற்றர்) நீளத்தில் வெடிப்புகள் மற்றும் வீதியில் இரு இடங்கள் 1.82 மீற்றர் அளவில் கீழிறங்கிய நிலைகளும் காணப்பட்டன. | சுட்டிக் காண்பித்த குறைபாடு களை மீள் செய்துகொள்ள நடவடிக்கை எடுப்பேன். | மதிப்பீட்டின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட தரத்துடனான நிர்மாண வேலைகள் மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) மடுள்ள பிரதேச சபையினால் அபிவிருத்தி செய்யப்படாத கோயில்கள் மேம்பாட்டுத் திட்டம் 2021 இன் கீழ் போதிலும் விகாரையில் கழிவரையை நிர்மாணிப்பதற்காக 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா.340,000 செலவிடப்பட்டது. சுற்றுவட்டாரப் பகுதிக்கு கொங்கிரீட் இடல் மற்றும் பூச்சுப் பூசுவதற்கு ரூபா 39,381 செலுத்தப்பட்டிருந்த போதிலும் வெள்ளை பூச்சு செய்யப்படாமையால் அதற்கென செலுத்தப்பட்டிருந்த ரூபா 14,884 மேலதிக கொடுப்பனவாக அவதானிக்கப்பட்டது. | கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 14,184 தொகையை பிடிகாசினை விடுவிக்கும் போது அறவிடுவதாக அறிய தருகின்றேன். | மதிப்பீடு செய்யப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) மடுள்ள பிரதேச செயலகத்தினால் விளையாட்டரங்கு அபிவிருத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2021 இன் கீழ் மாரிஅராவ வொலிபோல் விளையாட்டரங்கு அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்கு உரிய ரூபா 38,190 ஆன தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 38,190 தொகையை பிடிகாசினை விடுவிக்கும் போது அறவிடுவதாக அறிய தருகின்றேன். | உடன்படிக்கை பிரகாரம் தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |

## 3.4 பெறுகைகள்

---------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) மொனராகலை மாவட்ட செயலகத்தினால் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி e- signature முறைக்காக 2,430,000 ரூபா செலவில் 18 டெப் இயந்திரங்களை கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| i தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனர் கட்டளை இடப்பட்ட டெப் இயந்திரங்களை வழங்க இயலாமையால், வழங்குனரால் வழங்கப்பட்ட | குறித்த காலப்பகுதியில் சந்தையில் கணனிகள் மற்றும் தொழில்நுட்ப சாதனங்களின் பற்றாக்குறை மற்றும் விலைகளை மீண்டும் அழைக்க போதுமான நேரம் | பெறுகை செயல்முறை மூலம் எதிர்கபார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பெறுகை செயற்பாடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 18 வகையான டெப் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன், அவ்வாறு வேறு விவரக்குறிப்புகளுடன் ஒரு பொருளை வாங்கும்போது, மீண்டும் கேள்வி கோரல் மேற்கொள்ளாமல் வழங்குனர் முன்வைத்த விலையின் பேரில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | இல்லாததால், விவரக்குறிப்புகள் மற்றும் விலை பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் இருந்ததால் கொள்வனவு செய்யப்பட்டது. | |
| ii | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாண கோவையின் 156 (7) பிரமாணத்தின் படி, தமக்கு செயற்படுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட அனைத்து நிதி கொடுக்கல் வாங்கல்களிலும் உரிய கவனத்துடன் கையாள வேண்டும், ஆனால் ரூபா 2,430,000 ஆன டெப் இயந்திரங்களை கொள்வனவு செய்யும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ஒன்று ரூபா 135,000 வீதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த டெப் இயந்திரத்தின் இயலளவுடன் கூடிய டெப் ஒன்றுக்கு ரூபா 86,990 ஆன குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திடமிருந்து கொள்வவு செய்திருந்தால் கிரயம் ரூபா 864,180 ஆல் குறைத்துக் கொள்ள கூடியதாக இருந்திருக்கும். | சேவைகளை வழங்குவதற்கான செயற்பாடு சிறப்பாகவும், செயற்திறனாகவும் நிறைவேற்றுவதற்காக இந்த டெப் இயந்திரங்கள் நி.பி 156(7) இன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | நிதி கொடுக்கல் வாங்கல்கள் உரிய கவனத்துடன் கையாள வேண்டும். |
| (ஆ) | மாவட்டச் செயலகத்தினால் 2021 திசெம்பர் மாதத்தில் 03 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 1,094,322 இற்கு டயர்களை வாங்கும் போது அரசின் பெறுகை வழிகாட்டல்கள் கோவையின் 5.6.1 மற்றும் 5.6.2 பிரிவின் படி வாகனங்களுக்குத் தேவையான டயர் மற்றும் டயர்களின் அளவு ஆகியவற்றை குறிப்பிட்டு டயர்களுக்கான விவரக்குறிப்புகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. விலை கோரப்பட்டிருந்த அளவிற்கு டயர் கொள்வனவை | பிரதேச செயலாளர்களினால் முன்வைக்கப்பட்ட விடயங்களை கருத்தில் கொண்டு, அவர்களின் சேவைகளை நிறைவேற்றுவதில் வசதி மற்றும் முன்னைய நடைமுறைகள் என்பனவற்றை கருத்தில் கொண்டு டயர்களுக்கான விலைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டன. | அரசின் பெறுகை வழிகாட்டல்கள் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏநடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வசாகனங்களுக்காக பயன்படுத்த வேண்டிய டயர்களின் நியம அளவுகளின் பிரகாரம் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பரிந்துரைக்க முடியாதெனவும் அதன் பிரகாரம் கெப் வண்டிகளுக்க ஏற்ற அளவில் டயருக்காக மீண்டும் விலையை பெறுவது பொருத்தமானது, என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்திருந்த போதும் அப் பரிந்துரையின்படி செயல்படவில்லை. பின்னர், மூன்று பிரதேச செயலாளர்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பொருத்தமற்றதென பரிந்துரைத்த அளவிலான டயர்களை கொள்வனவு செய்வதே பொருத்தமானது என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மீண்டும் வழங்கிய பரிந்தரைக்கு அமைய ரூபா 431,568 பெறுமதியான 12 டயர்கள் கொள்வனவு செய்யப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | நெல் மற்றும் தானியங்கள், உணவு, காய்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை ஊக்குவிப்பு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சின் அனுமதியின்றி விவசாய அமைப்புக்களுக்கு வழங்குவதற்காக வாங்கப்பட்ட களையெடுக்கும் இயந்திரங்கள், ‘‘தனிநபர் உரிமையில் 50 பங்களிப்பினை ஏற்க முன்வந்த நலனாளிகளுக்கு வழங்குவதற்கு” 2022 ஜனவரி 27 ஆந் திகதிய மாவட்ட விவசாயக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டதால் நலனாலிகளுக்கு கூடியளவில் பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்திருந்த செயற்திட்ட முன்மொழிவின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வில்லை என்பதாக அவதானிக்கப்பட்டது. | பொது உரிமைகள் தொடர்பான பிரச்சினை காரணமாகவும், மாவட்ட விவசாயக் குழுவுக்கு தீர்மானம் எடுக்கும் அதிகாரம் உள்ளதாலும், குழு அறிக்கைகள் விவசாய இராஜாங்க அமைச்சிற்கு அனுப்பப்படுவதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் படி திட்டமிடப்பட்ட முறையில் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | தனமல்வில பிரதேச செயலகத்திற்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் 60 பயனாளிகளுக்கு கோழிக் குஞ்சுகளை விநியோகிப்பதற்காக | | |

ரூபா 1,338,000 ஒதுக்கீடு கிடைத்திருந்ததுடன், 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி 2,220 கோழிக் குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டு, ரூபா 865,800 விநியோகஸ்தருக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| i | குஞ்சுகளை கொள்வனவு செய்வதற்காக கேள்வி கோரிய 05 பேரில் இரண்டு பேர் கோழிக் குஞ்சுகளை வழங்குவதில் ஈடுபடவில்லை என்பதும், ஏனைய இரண்டு கேள்விதாரர்கள் அந்த வகை குஞ்சுகளை வழங்காமல் இருப்பது அவதானிக்கப் பட்டதுடன் அதன் பிரகாரம் 2006 அரசின் பெறுகை வழிகாட்டல்கள் கோவையின் 1.2.1(இ) பிரிவின் படி தகுதியான அக்கரை செலுத்தும் தரப்பினருக்கு பெறுகைக்கு சமூகமளிப்பதற்காக நியாயமான சமமான மற்றும் கூடிய வாய்ப்புகளை பெறுகை செயற்பாட்டின் மூலம் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டிய போதிலும், அந்நோக்கத்திற்கு இணங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | அடுத்த பெறுகை செயற்பாடுகளின் போது இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருப்பதாகவும் பெறுகை வழிகாட்டல்கள் கோவையின் 1.2.1(இ) பிரிவின் பிரகாரம் தகுதியான வழங்குினர்களை தெரிவுசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | அரசின் பெறுகை வழிகாட்டல்கள் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii | தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனர் தவிர, 4 கேள்விதாரர்களிடமிருந்து விலை கோரல் அனுப்பும் கடிதங்கள் ஒரே தபால் அலுவலகத்திலிருந்து கடிதங்கள் 4 தொடர்ச்சியான பதிவு இலங்கங்களுடன் அனுப்பியிருந்தாகவும் விவரக் குறிப்பு உறுதிப்படுத்தல்கள் தொடர்பான எந்த தகவலும் இணைக்கப்படவில்லை. மேலும் இரண்டு ஏலதாரர்களின் பெயரில் தவறான கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை | அடுத்த பெறுகை செயற்பாடுகளின் போது பெறுகை வழிகாட்டல்கள் கோவையின் 1.2.1(ஊ) பிரகாரம் மதிப்பீடு மற்றும் தெரிவு நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அறிய தருகின்றேன். | அரசின் பெறுகை வழிகாட்டல்கள் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. கேள்வி சமர்ப்பித்தல் அசாதாரணமாக என பெறுகை குழுவினாலும் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு அறிந்திருந்தும் இந்த விலை விபரங்கள் அடிப்படையில் பெறுகை தீர்மானம் வழிகாட்டல்கள் கோவையின் 1.2.1(ஊ) இன் கீழ் குறிப்பிடப்படும் மதிப்பீடு மற்றும் தெரிவு செயற்பாட்டுக் கோவையின் வெளிப்படைத் தன்மை மற்றும் ஒழுங்கு முறைமையின் நோக்கங்களை மீறியிருப்பதாக அவதானிக்கப்பட்டது. | | |
| iii | கோழிக் குஞ்சுகளை வாங்குவதற்கு முன்னர், வழங்குனரால் வழங்கப்படும் கோழிக் குஞ்சுகள் விலைகோரலின் போது விவரக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள குஞ்சுகளின் வகை என்பதை வழங்குனர் சரிபார்த்து உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படா திருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட கோழிக் குஞ்சுகள் 60 பயனாளிகளுக்கு 2021 ஏப்ரல் மாதத்தில் விநியோகிக்கப்பட்டன. , 2021 ஒக்டோபர் மாதமளவில் விநியோகிக்கப்பட்ட 2,220 கோழிக் குஞ்சுகளில் 1,067 இறந்து விட்டதாக பின்தொடர் அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | வழங்குனர் ஒரு கோழிக் குஞ்சினை மிகக் குறைந்த விலையில் வழங்குவது மற்றும் முறையான தடுப்பூசி போடப்பட்டதாக குறிப்பிட்டு உறுதி அளித்ததன் அடிப்படையில் இந்தக் குஞ்சுகளை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. போக்குவரத்து செய்வதற்கு முன்னர் பரீட்சிப்பது நடைமுறையில் கடினமாக இருப்பதால், போக்குவரத்திற்கு முன்னர் பரீட்சிப்பு மேற்கொள்ளப்படவில்லை. அந்த காலகட்டத்தில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று நிலைமை காரணமாக, குஞ்சுகளின் இறப்பு குறித்த சோதனைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. | முதலீடு செய்யப்பட்ட பணத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டியதுடன் எதிர்பாரத்த இலக்குகளை அடைய வேண்டும். |
| iv | இத்திட்டத்திற்காக வணிக ரீதியிலான கோழிப் பண்ணைகளை அமைப்பதற்கு நிதிஏற்பாடு வழங்கப்படும் என்று கூறப்பட்ட போதிலும், செயற் திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் விலைகள் கோரப்பட வில்லை என்பதால் நலனாலிகளுக்கு இறைச்சி | இத்திட்டத்திற்காக, நிதி அமைச்சின் பிரதி செயற்திட்டப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி, உலக உணவுத் திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில், கிரிராஜ்பாகஸ் ஹெக் கிரொஸ் வகையான குஞ்சுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக என்பதைத் தெரிவித்துக் | செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட பிரகாரம் செயற்படுத்தப்பட வேண்டியதுடன் மற்றும் பயன்படுத்தப்படும் நிதியை செயற்திறனாக பயன்படுத்தி எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் முட்டை ஆகிய இரண்டிற்காகவும் பயன்படுத்தும் கோழிகளுடன் கலப்பு விசேடமொன்றும் மேலும் வர்த்தக முட்டை இடும் வகையில் அல்லாத சிலவைகளும் என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 1,338,000 ஆன நிதி ஏற்பாட்டின் மீது செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டத்தின் மூலம் நலனாலிகளுக்கு ஆகக்கூடிய பொருளாதார நலன்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நிர்ணயிக்கப்பட்ட விவரக் குறிப்புக்களுடன் கூடிய கோழிக் குஞ்சுளை கொள்வனவு செய்ய முடியாமல் இருந்ததுடன் அதனால் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்று முடியாதெனவும் அவதானிக்கப்பட்டது. | கொள்கிறேன். | |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்திற்குரிய ஓட்டநிலைமையில் இல்லாத மற்றும் திருத்தம் பொருளாதார ரீதியாக செயற்திறனற்ற 5 வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 05 வாகனங்களை ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | விரைவில் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்திற்குரிய 04 வாகனங்கள் 04–16 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட வீச்சிலும் பிபில பிரதேச செயலகத்திற்குரிய 03 வாகனங்கள் 06–18 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட வீச்சிலும் மடுள்ள பிரதேச செயலகத்திற்குரிய 03 வாகனங்கள் 01–15 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட | கைதவிர்ப்பதற்கு தேவையான எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திருத்தம் செய்வதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வீச்சிலும் வெள்ளவாய பிரதேச செயலகத்திற்குரிய வாகனமொன்று 2015 ஆம் ஆண்டில் இருந்தும் தனமல்வில பிரதேச செயலகத்திற்குரிய நீர் பவுசரொன்று 2018 ஆம் ஆண்டில் இருந்தும் செயலற்ற நிலைமையில் அலுவலக வளவில் விளைவற்று காணப்பட்டதுடன் அவற்றைத் திருத்தம் செய்வதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

### 3.6 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெள்ளவாய பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2016 திசெம்பர் 17 ஆந் திகதி விபத்திற்குட்பட்டு ரூபா 2,630,726 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. அந்நட்டத்தில் ரூபா 2,265,342 தொகை 2017 ஒக்தோபர் 17 ஆந் மீள்நிரப்பப்பட்டிருந்ததுடன் திருத்த நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 176,860 ஆன கழிவு தவிர அரச செலவில் ரூபா 188,524 ஏற்கப்பட்டிருந்த போதும் அந்நட்டத்தை நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் நட்டத்தை புத்தகங்களிலிருந்து பதிவழித்தல் அல்லது அறவிடுவது தொடர்பாக கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | விபத்திற்குரிய ரூபா 188,524 தொகை வாகனத் திருத்த செலவின விடயத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் நட்டத்தை பதிவழித்தல் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) | வெள்ளவாய பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2002 செப்தெம்பர் 19 ஆந் திகதி விபத்திற்குட்பட்டு ரூபா 375,000 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. நிதிப்பிரமாணம் 104(4) இன் அறிக்கையின் பிரகாரம் ரூபா 375,000 ஆன நட்டத்தை சாரதியிடம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந் நட்டத்தை சாரதியிடம் அறவிடுமாறு 2013 ஏப்ரல் 23 ஆந் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் குழு கூட்டத்தில் கட்டளையிடப் | இவ்விபத்து தொடர்பாக பொறுப்பான சாரதியிடமிருந்து விபத்திற்குரிய நட்டமான ரூபா 375,000 தொகையில் ரூபா 122,500 இதுவரை அறவிடப்பட்டுள்ளதுடன் மாதமொன்றுக்கு ரூபா 2,500 வீதம் தொடர்ந்து அறவிடப்பட்டு வருவதக அறிய தருகின்றேன் | நட்டத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்நட்டத்திலிருந்து ரூபா 110,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டின் போது தனமல்வில பிரதேச செயலகத்தினால் ''வளமான கிராமம்'' மக்கள் பங்களிப்பு கிராமிய அபிவிருத்தி திட்டத்தின் ரூபா 8,291,665 செலவினத்தில் கிரவல் இடல் மற்றும் மோட்டார் கிரேடர் இடல் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட 11 வீதிகளில் 2021 ஆம் ஆண்டின் போது காபட் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. மாவட்டத்தின் பிரதேச செயலக மட்டத்தில் வீதிகள் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டினுள் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகள் தொடர்பான அறிக்கை பேணப்பட்டிருந்தால் ஓராண்டிற்கு குறைந்த காலப்பகுதியில் அதில் 11 வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதாக குழுக்களில் அறிவிக்கப்பட்டு வேறு முன்னுரிமை வழங்கக்கூடிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு வாய்ப்புக்கள் இருந்தன. பிரதேச அல்லது மாவட்ட இணைப்புக் கூட்டங்களில் பரிந்துரைத்த பிரகாரம் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளும் அரச நிறுவனங்கள் இணைந்து திட்டமிட்டு நடவடிக்கை எடுக்காமையால் அரசின் பணம் பொருளாதார ரீதியில் சிக்கனமாக ஈடுபடுத்ததலொன்று இடம்பெறவில்லையென்பதாக அவதானிக்கப்பட்டது | இந்த வீதிகள் காபட் இட்டு அபிவிருத்தி செய்வதற்கு பொருத்தமானதென வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் எமக்கு அறிவிக்கப்படவில்லை அத்துடன் கிராமிய குழு முன்மொழிவுகளில் முன்னுரிமை அளித்தலின் பிரகாரம் குறித்த செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. | அரசின் நிதியத்தை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும் |

**3.8 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 உப பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தரொருவரின் சம்பளத்திலிருந்து அறவிடப்படும் வீட்டு வாடகை அதன் நியாயமான சிக்கன வாடகையை விட கருத்திற் கொள்ளக் கூடியளவில் அதிகமாக இருந்தால் உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து நூற்றுக்கு ஒரு அளவு விடுவதற்குப் பதிலாக திட்டவட்டமான வீட்டு வாடகையொன்று செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் அறவிட முடியுமான போதிலும் அதற்கு இணங்காத வகையில் 2015 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் மதிப்பீட்டின் பிரகாரம் 12 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 70,892 ஆன மதிப்பீட்டு வாடகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது. | 2018 திசெம்பர் மாதம் இருந்த சம்பளத்தின் பிரகாரம் அறவிடப்பட்டிருந்ததுடன் சம்பள அதிகரிப்பின் போதும் சம்பள ஏற்றம் வழங்கும் போது அச்சம்பளத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வ வீட்டிற்கான வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. அறவிடுவதற்காக உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர். | தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய வீட்டு வாடகை குறைவாக அறவிட்ட காரணமாக 51 உத்தியோகத்தர் களுக்குரிய ரூபா 1,265,692 ஆன வீட்டு வாடகை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் நிலுவையாக காணப்பட்டது. | நிலுவை வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டிய ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவை தொகை தவணையாக அல்லது ஒரே தடவையாக கொடுப்பனவு செய்யுமாறு அறிவிக்கப்ப ட்டிருந்ததுடன் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட்டு அனுப்புமாறு நிறுவனத் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | நிலுவை வாடகை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (இ) 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் மேலதிக எரிபொருள் ஏற்பாடு பெற்றுக் கொள்வதாயின் அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மொனறாகலை மாவட்ட | செயற்திட்டங்களை பரீட்சிப்பதற்காக மேலதிக எரிபொருளை பெற்றுக் கொண்டுள்ளனர். அதற்காக ஒதுக்கீடு செய்துள்ள நிர்வாக செலவினத்தின் மூலம் மேலதிக எரிபொருள் செலவினம் தீர்வு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த | மேலதிக எரிபொருள் ஏற்பாட்டிற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | செயலகத்தினால் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் 03 ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்காக கட்டளையின் பேரில் 3924.3 லீற்றர் எரிபொருளும் பட்டியல் மீள் நிரப்பல் அடிப்படையில் 1281.317 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 139,500 செலவிடப்பட்டிருந்தது. | எரிபொருள் செலவினம் அச்செயற்திட்ட செயற்பாடு களை கண்காணிப்பதற்காக பயன்படுத்தப்பட்டதுடன் மாவட்டத்திற்கு வெளியே செல்வதற்காக பெற்றுக் கொண்ட எரிபொருளுக்குரிய பட்டியல்கள் மீளளிக்கப்பட்டுள்ளன. | |
| (ஈ) | மெதகம பிரதேச செயலகத்தினால் ஓய்வூதிய கொடுப்பனவின் போது 04 ஓய்வூதியம் பெறுவோருக்காக ரூபா 490,061 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அத்தொகையில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 337,061 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | இத்தொகையில் ரூபா 190,000 அறவிடப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய தொகையை எதிர்வரும் காலங்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மேலதிக கொடுப்பனவு தாமதமின்றி அறவிடப்பட வேண்டும் |
| (உ) | தனமல்வில பிரதேச செயலகத்தின் 2010 முதல் 2016 ஆம் ஆண்டு வரை காலப்பகுதியில் பகிர்ந்தளிப்பதற்கு தயாரிக்கப்பட்ட 37 (அனுமதிப் பத்திரங்கள்) அதிகாரப் பத்திரங்களை நலனாலிகளுக்கு பகிர்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2021 திசெம்பர் 15 ஆந் திகதி வரையிலும் அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அந்த அதிகாரப்பத்திரங்களை பகிர்ந்தளிப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அதிகாரப் பத்திரங்களை நலனாலிகளுக்கு விரைவில் பகிர்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மாவட்ட காணி ஆணையாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட 13 மானியப் பத்திரங்கள் மற்றும் 2021 ஒக்தோபர் 06 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட 29 மானியப் பத்திரங்கள் பத்திர உடமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் 2021 திசெம்பர் 15 ஆந் திகதி வரையிலும் தனமல்வில பிரதேச செயலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் அனுமதிப்பத்திரங்களையும் மானியப் பத்திரங்களையும் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுப்பேன். | மானியப் பத்திரங்களை விரைவில் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 4 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மொனறாகலை மாவட்ட செயலகத்தினால் அச்சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்த துடன் மொத்த பதவியணியினருக்கும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமை எதிரே உத்தியோகத்தர்கள் குறைந்த அளவிலேயே சேவைக்கு வருகை தரல் போன்ற விடயங்கள் காரணமாக செயலாற்றல் உடன்படிக்கையில் கையொப்பமிடல் இடம் பெறவில்லை எனினும் 2022 ஆம் ஆண்டிலிருந்து முறையாக மேற்கொள்ளப் பட்டு வருவதாக அறியத் தருகிறேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயலாற்றல் உடன்படிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் |
| (ஆ) | மொனறாகலை மாவட்ட செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையில் நிறைவேற்றுனர் தரத்தின் 13 பதவிகளும் மூன்றாம் தரத்தின் 21 பதவிகளும் இரண்டாம் தரத்தின் 117 பதவிகளும் ஆரம்ப தரத்தின் 11 பதவிகளும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வெற்றிடங்களாக காணப்பட்டன. மேலும் 05 பிரதேச செயலகங்களில் இரண்டாம் தரத்தின் 55 ஊழியர்கள் மிகையாக காணப்பட்டனர். | அனைத்து பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பான பொது நிர்வாக அமைச்சு மற்றும் உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. பதவிகளில் மிகையாகு வதற்கு புதிய நியமனம் பெறப்பட்ட உத்தியோகத்தர்களே காரணம் எனக் அறவிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆகக்கூடிய சேவைக் காலம் 05 ஆண்டுகள் ஒவ்வொரு சேவை நிலையத்திலும் / பதவியிலும் சேவை புரிந்துள்ள ஒவ்வொரு உத்தியோகத்தரும் வேறு சேவை நிலையங்களில் சேவை புரிவதற்கு இடமளிப்பதற்காக இடமாற்றம் வழங்கப்பட வேண்டும். எனினும் மொனறாகலை மாவட்ட செயலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள 30 உத்தியோகத்தர்கள் மற்றும் 11 பிரதேச செயலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள 575 உத்தியோகத்தர்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 06 ஆண்டுகள் முதல் 30 ஆண்டுகள் வரையான காலம் ஒரே சேவை நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.. | ஒவ்வொரு ஆண்டும் வருடாந்த இடமாற்றங்கள் கோரப்படும் சந்தர்ப்பத்தில் அனைத்து உத்தியோகத்தர்களும் தெரியப்படுத்தி இடமாற்ற விண்ணப்பத்திற்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்த போதும் அமைச்சிற்கே புறம்பாக தகவல் முறைமையொன்று நாளது வரையாக்கப்பட்டு நிகழ்நிலை ஊடாக இடமாற்றம் மேற்கொள்ளப் படுவதாகவும் அவ்வாறு இடமாற்றத்திற்காக விண்ணப்பித்த போதும் அதிகமான உத்தியோகத்தர் களுக்கு வருடாந்த இடமாற்றங்கள் கிடைக்கப்பெறவில்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றம் தொடர்பாக செயற்பட வேண்டும். |